மதிப்புகளைப் (முழுக்கள்) பயன்படுத்துவது நமக்கு நன்மை பயக்கும். ஒரு சோடிப் புள்ளிகளின் வழியாக தனித்துவமான ஒரே ஒரு நேர்க்கோடு மட்டுமே செல்லும்.

### எடுத்துக்காட்டு 3.44

$y = 5x$ என்ற சமன்பாட்டிற்கு வரைபடம் வரைக.

**தீர்வு:**

| $x$ | $y = 5x$ |
|---|---|
| $-3$ | $y = 5 \times (-3) = -15$ |
| $-1$ | $y = 5 \times (-1) = -5$ |
| $0$ | $y = 5 \times (0) = 0$ |
| $2$ | $y = 5 \times (2) = 10$ |
| $3$ | $y = 5 \times (3) = 15$ |

கொடுக்கப்பட்ட $y = 5x$ என்ற சமன்பாட்டில் y என்பது $x$ இன் மதிப்பைப் போல் 5 மடங்கு ஆகும்.

| x | −3 | −1 | 0 | 2 | 3 |
|---|---|---|---|---|---|
| y | −15 | −5 | 0 | 10 | 15 |

(−3,−15) (−1,−5) (0,0) (2,10) (3,15) ஆகிய புள்ளிகளை வரைபடத்தாளில் குறித்து, அவற்றை இணைக்க, நமக்கு $y = 5x$ என்ற நேர்க்கோடு கிடைக்கிறது.




### எடுத்துக்காட்டு 3.45

***y* = *x* + 1 என்ற சமன்பாட்டிற்கு வரைபடம் வரைக.**

$x$ மற்றும் $y$ ஆகியவற்றிற்கு இரண்டு மதிப்புகளைத் தேர்ந்தெடுத்து தொடங்குவோம். முதலில்

(i) $x$ மதிப்பு 0 ஆக இருக்கும்போது $y$ மதிப்பு என்னவாக இருக்கும். மேலும்

(ii) $y$ மதிப்பு 0 ஆக இருக்கும்போது $x$ மதிப்பு என்னவாக இருக்கும் என அறியலாம். மேலும் ஒன்று அல்லது இரண்டுக்கும் அதிகமான மதிப்புகளைப் பிரதியிட்டுக் காண்போம்.

குறைந்தபட்சம் இன்னும் இரண்டு வரிசைச் சோடிகளையாவது கண்டுபிடிக்க வேண்டும். எளிமையாக வரைய பின்னவடிவ மதிப்புகளைத் தவிர்க்க வேண்டும். சரியான சோடிப் புள்ளிகளை ஊகிக்க வேண்டும்.



8th_Maths_Tamil Medium_Chapter 3.indd 121 23/11/2022 16:10:31